# <u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>

| அனுப்புநர் | பெறுநர். |
|---|---|
| திரு.சு.ரவிச்சந்திரன் பி.ஏ., | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், |
| ஆணையாளர், | திருநெல்வேலி. |
| நகராட்சி அலுவலகம், | |
| கடையநல்லூர். | |

**ந.க..எண். 1838/2022/இ2** **நாள்: 30.08.2022**

அய்யா,

**பொருள்:-** நகர்மன்ற கூட்ட நடவடிக்கைகள் –கடையநல்லூர் நகராட்சி – ஆகஸ்ட்–2022 மாதம் நகர்மன்ற கூட்டம் நடத்தப்பட்டது– கூட்ட நடவடிக்கை விபரங்கள் அனுப்பிவைத்தல்– சார்பாக.

**பார்வை.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் குறிப்பாணை கடித ந.க.எண்.2652/2022/அ3, நாள்.18.07.2022.

*****

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சியில் **29.08.2022** அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின், கூட்ட நடவடிக்கை விபரங்கள் இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.

**இணைப்பு.**
29.08.2022 அன்று நடைபெற்ற
நகர்மன்றக்கூட்டத்தின் எடு குறிப்பு

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை.
2. மாவட்ட ஆட்சித்தலைவர், தென்காசி.

# கடையநல்லூர் நகராட்சி

## 29.08.2022 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டப்பொருள்கள் விவரம்.

**பொருள் எண்.1**

இந்நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள வடக்குப்பக்க கடை எண்.1க்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண் 496 நாள்.31.05.2021 ன்படி ரத்து செய்யப்பட்ட மேற்படி கடைக்கு 01.09.2022 முதல் 31.03.2025 வரை குத்தகை உரிமம் காலத்திற்கு 12.08.2022 அன்று பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் , முகவரி | வைப்புத்தொகை | மாத வாடகை |
|---|---|---|---|
| 1 | திரு.கே.எம்.அசன் இப்ராகிம்,<br>46/29, கல்வத்து நாயகம் சன்னதி தெரு,<br>கடையநல்லூர். | D.D.No.134072<br>Dt.06.08.2022<br>IOB. Bazzar . Kdnr<br>Rs.100000/- | 4000 |
| 2 | திரு.எஸ்.ரஹ்மத்துல்லா,<br>61/1F3. அல்லிமூப்பன் கிழக்கு தெரு,<br>கடையநல்லூர் | D.D.No.134071<br>Dt.06.08.2022<br>IOB. Bazzar . Kdnr<br>Rs.100000/- | 3900 |

மேலும் மேற்கண்ட குத்தகை இனத்திற்கு கேட்கப்பட்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண்.1ல் திரு.கே.எம்.அசன் இப்ராகிம், என்பவரின் உச்ச பட்ச ஏலக்கேள்வியான மாத வாடகை தொகை ரூ.4000/- கூடுதலாக உள்ளது. மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மேற்கண்ட கடைக்கு 27.07.2021, 13.08.2021, 3.09.2021, 23.09.2021, 16.12.2021, 31.12.2022, 25.03.2022, 29.04.2022, 24.05.2022 மற்றும் 24.06.2022 வரை 10 தடவை பொது ஏலம் கோர யாரும் முன்வரவில்லையாதலால் வரிசை எண் 1ல் கண்ட நபரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை முடிவு செய்து அன்னாருக்கு 01.09.2022 முதல் 31.03.2025 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கலாம். மேலும் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.181 நாள்.19.09.2008 ன்படி கடைகளுக்கான குத்தகை உரிமம் 9 ஆண்டுகளுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் உரிமம் நீடிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4949/2020/சி2)**

**தீர்மானம் எண்:-139**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.2**

இந்நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள தென்பக்க நுழைவுவாயில் அருகில் உள்ள காலியிட குத்தகைக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண் 657 நாள்.31.12.2021 ன்படி ரத்து செய்யப்பட்ட மேற்படி கடைக்கு 01.09.2022 முதல் 31.03.2025 வரை வாடகை உரிமம் காலத்திற்கு 12.08.2022 அன்று பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் , முகவரி | வைப்புத்தொகை | மாத வாடகை |
|---|---|---|---|
| 1 | பக்ருதீன் அலி அஹமது<br>த/பெ.முஹம்மது கனி,<br>194, மவுண்ட் ரோடு,<br>தென்காசி. | D.D.No.888469<br>Dt.11.08.2022<br>SIB.. Tenkasi<br>Rs.100000/- | 3000 |
| 2 | திரு.சேக்மைதீன்,<br>த/பெ.திவான் மைதீன்,<br>38/470, செய்யது குருக்கள்<br>பள்ளிவாசல் தெரு,தென்காசி. | D.D.No.962567<br>Dt.11.08.2022<br>Canara.. Tenkasi<br>Rs.100000/- | 3100 |

மேலும் மேற்கண்ட குத்தகை இனத்திற்கு கேட்கப்பட்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண்.2ல் திரு.சேக்மைதீன் என்பவரின் உச்ச பட்ச ஏலக்கேள்வியான மாத வாடகை தொகை ரூ.3100/-

கூடுதலாக உள்ளது. மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மேலும் .மேற்கண்ட கடைக்கு 25.03.2022, 29.04.2022, 24.05.2022 மற்றும் 24.06.2022 வரை 4 தடவை பொது ஏலம் கோர யாரும் முன்வரவில்லையாதலால் வரிசை எண் 1ல் கண்ட நபரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை முடிவு செய்து அன்னாருக்கு 01.09.2022 முதல் 31.03.2025 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கலாம். மேலும் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.181 நாள்.19.09.2008 ன்படி கடைகளுக்கான குத்தகை உரிமம் 9 ஆண்டுகளுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் உரிமம் நீடிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் முடிவு செய்யலாம்

**(ந.க.எண்.4949/2020/சி2)**

**தீர்மானம் எண்:–140**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு 27மேலக்கடையநல்லூர் தேரடி திடல் தெற்கு ரதவீதி கடை எண் 3க்கு ஏலம்/ ஒப்பந்தபுள்ளி நடவடிக்கை 22.07.2022 அன்று நடைபெறவுள்ளதாக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் தென்காசி அவர்கள் வழியாக தினநாளிதழில் 22.06.2022 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. மேற்கண்ட தினத்தில் ஏல /ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வராததால் 01.09.2022 முதல் 31.03.2025 வரை குத்தகை உரிமம் காலத்திற்கு 12.08.2022 அன்று மீண்டும் பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் , முகவரி | வைப்புத்தொகை | மாத வாடகை |
|---|---|---|---|
| 1 | திரு.சண்முகராஜ்,<br>த/பெ.மாடசாமி,<br>5/140, 39, திருநகர்,<br>குத்துக்கல் வலசை | D.D.No.660206<br>Dt.11.08.2022<br>TMB. KDNR<br>Rs.50000 | 2900 |
| 2 | திரு.கார்த்திக்,<br>த/பெ.சொள்ளமுத்து,<br>105/172, கரிய மாணிக்க பெருமாள் கோவில் தெரு,<br>மேலக்கடையநல்லூர் | D.D.No.660207<br>Dt.11.08.2022<br>TMB, Kdnr<br>Rs.50000 | 2800 |

மேலும் மேற்கண்ட குத்தகை இனத்திற்கு கேட்கப்பட்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண்.1ல் திரு.சண்முகராஜ் என்பவரின் உச்ச பட்ச ஏலக்கேள்வியான மாத வாடகை தொகை ரூ.2900/– கூடுதலாக உள்ளது. மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. எனவே அன்னாரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை முடிவு செய்து அன்னாருக்கு 01.09.2022 முதல் 31.03.2025 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கலாம். மேலும் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.181 நாள்.19.09.2008 ன்படி கடைகளுக்கான குத்தகை உரிமம் 9 ஆண்டுகளுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடைக்கான குத்தகை உரிமம் நீடிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4949/2020/சி2)**

**தீர்மானம் எண்:–141**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு 27மேலக்கடையநல்லூர் தேரடி திடல் தெற்கு ரதவீதி கடை எண் 4க்கு ஏலம்/ ஒப்பந்தபுள்ளி நடவடிக்கை 22.07.2022 அன்று நடைபெறவுள்ளதாக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் தென்காசி அவர்கள் வழியாக தினநாளிதழில் 22.06.2022 அன்று விளம்பரம்

செய்யப்பட்டது. மேற்கண்ட தினத்தில் ஏல /ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வராததால் 01.09.2022 முதல் 31.03.2025 வரை குத்தகை உரிமம் காலத்திற்கு 12.08.2022 அன்று மீண்டும் பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் , முகவரி | வைப்புத்தொகை | மாத வாடகை |
|---|---|---|---|
| 1 | திரு.வேலுத்துரை<br>63/135, கரிய மாணிக்க பெருமாள் கோவில் தெரு,கடையநல்லூர் | D.D.No.134074<br>Dt.11.08.2022<br>IOB. KDNR<br>Rs.50000 | 2900 |
| 2 | திரு.வே.வெள்ளத்துரை,<br>17/1, தெற்குரத வீதி,<br>கடையநல்லூர் | D.D.No.134075<br>Dt.11.08.2022<br>IOB, Kdnr<br>Rs.50000 | 2800 |

மேலும் மேற்கண்ட குத்தகை இனத்திற்கு கேட்கப்பட்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண்.1ல் திரு.வேலுத்துரை என்பவரின் உச்ச பட்ச ஏலக்கேள்வியான மாத வாடகை தொகை ரூ.2900/– கூடுதலாக உள்ளது. மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. எனவே அன்னாரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை முடிவு செய்து அன்னாருக்கு 01.09.2022 முதல் 31.03.2025 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கலாம். மேலும் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.181 நாள்.19.09.2008 ன்படி கடைகளுக்கான குத்தகை உரிமம் 9 ஆண்டுகளுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடைக்கான குத்தகை உரிமம் நீடிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4949/2020/சி2)**

**தீர்மானம் எண்:–142**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.5**

கடையநல்லூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் ஆறு துப்புரவு பணியாளர் பணியிடம் 01.10.2013 முதல் 30.09.2014 வரை நீடிப்பு செய்வதற்கு கூடுதல் இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை மூ மு 41626/2013/ஜே3 27/11/2013.ன்படி அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

கடையநல்லூர் நகராட்சி 33 வார்டுகளை உள்ளடக்கியதில் அன்றாடம் சேகரம் ஆகும் கழிவுகளை உரக்கிடங்கிற்கு எடுத்துச்செல்லவும், திடக்கழிவு மேலாண்மை பணிகளை உடனுக்குடன் செயல்படுத்திடவும் மேற்படி துப்புரவு பணியாளர் பணியிடம் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் 1.10.2014 முதல் 30.09.2022 வரை நீடித்து வைத்துக் கொண்டதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 564 நாள்.27.08.2021ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது அனுமதி பெற மன்றம் அனுமதித்துள்ளது. மேற்கண்ட ஆறு எண்ணம் தூய்மை பணியாளர் பணியிடத்திற்கு 01.10.2014 முதல் 30.09.2022 வரை நீடிப்பு செய்தமைக்கு பின்னேற்பும் 1.10.2022முதல் 30.09.2023 வரை ஓராண்டுக்கு காலநீடிப்பு ஆணை பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு உரிய செயற்குறிப்பினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் வழியாக சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2040 /2022/சி1)**

**தீர்மானம் எண்:–143**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

கடையநல்லூா் நகராட்சி பொதுப்பிரிவில் மூன்று வருவாய் உதவியாளர் பணியிடம் 01.10.2016 முதல் 30.9.2017 வரை நீடிப்பு செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை மூ.மு 27308/2016/எச்1 நாள் 21/10/2016.ன்படி அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

கடையநல்லூர் நகராட்சிப்பகுதி 33 வார்டுகளை உள்ளடக்கியும், சுமார் 33000 சொத்துவரி விதிப்புகள் கொண்டுள்ளதாகவும் உள்ளது. அதற்காக வரிவசூல் பணியினை துரிதப்படுத்தி வசூல் பணியினை மேம்படுத்துவதற்கும் மேற்படி வருவாய் உதவியாளர் பணியிடம் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் 1.10.2017 முதல் 30.09.2022 நீடிப்பு செய்ததற்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 565 நாள்.27.08.2021ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது அனுமதி பெற மன்றம் அனுமதித்துள்ளது. மேற்கண்ட வருவாய் உதவியாளர் பணியிடத்திற்கு 01.10.2017 முதல் 30.09.2022 முடிய நீடிப்பு செய்தமைக்கு பின்னேற்பும் மற்றும் 1.10.2022 முதல் 30.09.2023 வரை ஓராண்டுக்கு காலநீடிப்பு ஆணை பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு உரிய செயற்குறிப்பினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் வழியாக சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 2040 /2021/சி1)

**தீர்மானம் எண்:–144**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.7**

கடையநல்லூர் நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவில் உள்ள கீழ்கண்ட பணியிடங்கள் 01/10/2012 முதல் 30/09/2013 வரை நீடிப்பு செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை மூ.மு.16662/2009/எப்3 நாள் 27/10/2012.ன்படி அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

1. பொறியாளர் நிலை – III
2. மின்பணியாளர் நிலை – I
3. மின்பணியாளர் நிலை – II
4. குடிநீர் குழாய் பொருத்துநர் நிலை– I
5. குடிநீர் குழாய் பொருத்துநர் நிலை– II

மேற்கண்ட பணியிடங்கள் மக்களின் அன்றாட குடிநீர் தேவையினை நிவர்த்தி செய்யும் அத்தியாவசியமான பணியிடமாக உள்ளதால் 1/10/2013 முதல் 30/09/2022 வரை நீடிப்பு செய்ததற்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 566 நாள்.27.08.2021ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது அனுமதி பெற மன்றம் அனுமதித்துள்ளது. மேற்கண்ட பணியிடத்திற்கு 01.10.2017 முதல் 30.09.2022 முடிய நீடிப்பு செய்தமைக்கு பின்னேற்பும் 1.10.2022 முதல் 30.09.2023 வரை ஓராண்டுக்கு காலநீடிப்பு ஆணை பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு உரிய செயற்குறிப்பினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் வழியாக சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 2040 /2021/சி1)

**தீர்மானம் எண்:–145**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.8**

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேலக்கடையநல்லூர் பகுதியில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் பல வருடங்களாக சேகரிக்கப்பட்டு தேங்கியுள்ள குப்பைகளை Biomining முறைப்படி பிரித்து அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்படி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Step Land Survey Consultants,

பாண்டிச்சேரி நிறுவனத்தின் மூலம் Counter Level Survey எடுத்து அதன் கொள்ளளவினை நிர்ணயம் செய்து தரவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.25,000/–க்கும் (ரூபாய் இருபதைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 826/2022/இ1)**

**தீர்மானம் எண்:–146**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.9**

இந்நகராட்சிப் பகுதியில் உள்ள 1 முதல் 33 வார்டுகளிலும் மொத்தம் 2587 எண்ணம் தெரு விளக்குகள் உள்ளது. மேற்படி தெருவிளக்கு பணிகள் அனைத்தும் தனியார் மயமாக்கப்பட்டு ஆகாஸ் இஞ்சினியரிங் அசோசியட்ஸ் பிரைவேட் லிமிடெட், திருநெல்வேலி நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி தெருவிளக்குகள் பொருத்தப்பட்ட மின்கம்பங்களில் பெரும்பாலும் வார்டு எண் மற்றும் மின் கம்பம் எண் ஏதும் குறிப்பிடாத காரணத்தினாலும், தற்போது வார்டுகள் மறுவரையறை செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாலும், பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் எரியாத தெருவிளக்குகள் பற்றிய விபரத்தினை அதற்குரிய புகார் பதிவேட்டில் எழுதுவதற்கு சிரமப்பட்டு வருகின்றனர். எனவே புதிதாக மாற்றியமைக்கப்பட்ட வார்டுகளில் உள்ள தெரு விளக்கு மின் கம்பங்களில் வார்டு எண் மற்றும் மின்கம்பம் எண்களை எழுதுவதற்கும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.2,50,000/–க்கும், (ரூபாய் இரண்டு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியினை வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2175/2022/இ1)**

**தீர்மானம் எண்:–147**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.10**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.5 மலம்பாட்டை குறுக்குத் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை ரூ.6,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.09, நாள்.28.03.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 04.08.2022 அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. P.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.26% அதிகம் | ரூ.6000/– TMB Bank KDNR D.D.No.660169 நாள். 15.06.2022ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. J.மனோகர் ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.09% குறைவு | ரூ.6000/– செல்லான் எண்: 141/001/2/22–23/0001182 நாள். 15.06.2022ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைக் காட்டிலும் **0.09%** சதவீதம் குறைவாகவும் கொடுத்துள்ள திரு. J.மனோகர், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 682/2022/இ1)**

**தீர்மானம் எண்:–148**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.5 மகாராஜபுரம் கிழமேல் தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை ரூ.9,80,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.09, நாள்.28.03.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 04.08.2022 அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. P.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.26% அதிகம் | ரூ.9800/– TMB Bank KDNR D.D.No.660168 நாள். 15.06.2022ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. J.மனோகர் ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.09% அதிகம் | ரூ.9800/– செல்லான் எண்: 141/001/2/22–23/0001181 நாள். 15.06.2022ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைக் காட்டிலும் **0.09%** சதவீதம் குறைவாகவும் கொடுத்துள்ள திரு. J.மனோகர், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 682/2022/இ1)**

**தீர்மானம் எண்:–149**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.08, காலணி விளை வடக்குத்தெரு (சாலை குறியீட்டு எண். UNICODE 141008R097 & UNICODE 141008R098) மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை ரூ.9,50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.134, நாள்.29.07.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 04.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. K.S. அப்துல் மாலிக் ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 3.87% அதிகம் | ரூ.10000/– IOB Bank KDNR D.D.No.134068, நாள். 04.08.2022ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. E.ராமசாமி, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.004% குறைவு | ரூ.9500/– செல்லான் எண்: 141/001/2/22–23/0002363, நாள். 04.08.2022ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைக் காட்டிலும் **0.004%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.E.ராமசாமி, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 682/2022/இ1)**

**தீர்மானம் எண்:–150**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

கடையநல்லூர் நகராட்சி – வார்டுஎண்.09, வடக்குவாசெல்வியம்மன் கோவில் மேற்கு தெருவில் (சாலை குறியீட்டு எண். UNICODE 141009R102) பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை ரூ.7,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.134, நாள். 29.07.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 04.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. G.முருகன் ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 3.22% அதிகம் | ரூ.7000/– UNION Bank KDNR D.D.No.467174 நாள். 15.06.2022ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. G.முப்புடாதி ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.07% குறைவு | ரூ.7000/– செல்லான் எண்: 141/001/2/22–23/0001198 நாள். 15.06.2022ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.07%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. G.முப்புடாதி, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 682/2022/இ1)**

**தீர்மானம் எண்:–151**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.15 மற்றும் 16, ரயில்வே பீடர் ரோடு (உலகா பள்ளி அருகில்) பழுதடைந்த பாலங்கள் சரி செய்யும் பணியினை ரூ.3,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.09, நாள்.28.03.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 04.08.2022 அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. S.ஜெயமாலன்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.81%<br>அதிகம் | ரூ.3000/– CUB Bank KDNR D.D.No.633953, நாள். 27.05.2022ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. P.கணேசன்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.003%<br>குறைவு | ரூ.3000/– செல்லான் எண்: 141/001/2/22–23/0002266, நாள். 03.08.2022ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.003%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. P.கணேசன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 682/2022/இ1)**

**தீர்மானம் எண்:–152**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.30, கண்ணார் தெற்கு தெரு மற்றும் சுடலை மாடன் கோவில் எதிர்புறமுள்ள தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை ரூ.5,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.09, நாள் 28.03.2022ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 04.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. S.ஜெயமாலன்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.004%<br>குறைவு | ரூ.5000/– செல்லான் எண்: 141/001/2/22–23/0002368, நாள். 04.08.2022ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. P.கணேசன்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 2.75%<br>அதிகம் | ரூ.5000/– TMB Bank KDNR D.D.No.660205, நாள். 03.08.2022ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.004%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. S.ஜெயமாலன், ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 682/2022/இ1)**

**தீர்மானம் எண்:–153**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

கடையநல்லூர் நகராட்சி – NULM திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற தெரு வியாபாரிகளுக்கு (SUSV) ஆதரவின் கீழ் சேவை செய்யும் பொருட்டு இருமொழி அடையாள அட்டைகள் தயாரித்தல், விற்பனை சான்றிதழ் வழங்குதல், நகர தெரு விற்பனைத்திட்டம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்துதல் போன்ற பணி மேற்கொள்ள நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, மேற்காணும் பணிக்கு 15.07.2022 அன்று இணையதள வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணுமாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேலும் இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை.

| வ. எண் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்த விலை விகிதம் (நபர் ஒன்றுக்கு) | விலை குறைப்பு செய்த பின் ஒப்பந்த விலை விகிதம் (நபர் ஒன்றுக்கு | டேவணித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | MIRIFICAL CAREERS, PVT. LTD., #12A, Second Floor, K.K.Building, T.Nagar, Ramanathapuram, Coimbatore. | ரூ.700/– | ரூ.650/– | ரூ.10,000/–ஐ ICICI வங்கி, Coimbatore. D.D.No.500323, நாள். 14.07.2022–ன் படி சமர்பித்துள்ளார். |
| 2. | BHARATHI HR CONSULTANCY, #No.3/36, First Avenue, Rangasamy Naidu Layout, Kuniyamuthur, Coimbatore. | ரூ.850/– | – | ரூ.10,000/–ஐ ICICI வங்கி, Coimbatore. D.D.No.500339, நாள். 14.07.2022–ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் உள்ள MIRIFICAL CAREERS, PVT. LTD., Coimbatore. என்ற ஒப்பந்ததாரர் குறைவான விலையில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி விலை விகிதம் மிகவும் கூடுதலாக இருப்பதால் 22.07.2022 அன்று விலை குறைப்பு சம்மதக்கடிதம் கோரப்பட்டதில், மேற்படி ஒப்பந்ததாரர் தனது 25.07.2022–ம் தேதிய கடிதத்தில் மேற்படி பணியினை நபர் ஒன்றுக்கு ரூ.650/–என்ற விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே MIRIFICAL CAREERS, PVT. LTD., Coimbatore ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.2268/2016/எப்1)**

**தீர்மானம் எண்:–154**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

இந்நகராட்சி வார்டு எண்.31, இந்திரா நகர் புதுக்காலனியில் உள்ள சமுதாய கழிப்பறையினை GAP Filling Interest Fund –2021–2022 திட்டத்தின் கீழ் பராமரிப்பு செய்யும் பணி ரூ.5,25,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு தற்போது பணி முடிவுறப்பட்டுள்ளது. மேற்படி சமுதாய கழிப்பிடத்தில் சுற்றி வேலி இல்லாத காரணத்தினால் சமூக விரோதிகள் அத்துமீறி உள்ளே நுழைந்து கட்டிடத்திற்கு சேதம் விளைவித்து வருகின்றனர். எனவே மேற்படி சமுதாய கழிப்பிடத்தினை பாதுகாக்கும் பொருட்டு அதனை சுற்றி தடுப்பு வேலி அமைக்கும் பணியை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.1,00,000/–க்கும் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 5628 /2021/இ1)**

**தீர்மானம் எண்:–155**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண். 18**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN76P 9311 மினி ஆட்டோ வாகனத்தின் தகுதிச்சான்று காலம் 18.08.2022 நிறைவு பெற உள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி பழுதுகள் நீக்கி தகுதிச்சான்று பெறும் வகைக்கு உத்தேச செலவுத் தொகை ரூ.44200/–க்கும் வட்டார போக்குவரத்து அலுவலக செலவினங்களுக்கு மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2179/2022/எச்1)**

**தீர்மானம் எண்:–156**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.19**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN76AM 7462 TATA ACE வாகனத்தின் மின்கலம் பழுதடைந்து விட்டது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி புதிதாக மின்கலம் வாங்கி பொறுத்துவதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.5000/–க்கு மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2094/2022/எச்1)**

**தீர்மானம் எண்:–157**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.20**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN76AM 7486 TATA ACE வாகனத்திற்கு நான்கு டயர்களும் வாகனத்தை இயக்க முடியாத அளவிற்கு தேய்மானம் அடைந்துவிட்டது. மேற்படி வாகனம் அக்டோபர் 2019ல் வாங்கப்பட்டு நாளது தேதிவரை 15676 கி.மீ இயக்கப்பட்டுள்ளது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி புதிதாக நான்கு வாங்கிவதற்கு

உத்தேச செலவுத் தொகை ரூ.15900/—க்கு செலவினத்திற்கு மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2156/2022/எச்1)**

**தீர்மானம் எண்:—158**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.21**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN76AM 7465 TATA ACE வாகனத்திற்கு நான்கு டயர்களும் வாகனத்தை இயக்க முடியாத அளவிற்கு தேய்மானம் அடைந்துவிட்டது. மேற்படி வாகனம் அக்டோபர் 2019ல் வாங்கப்பட்டு நாளது தேதிவரை 20861 கி.மீ இயக்கப்பட்டுள்ளது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி புதிதாக நான்கு டயர்கள் வாங்குவதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.15900/—க்கு செலவினத்திற்கு மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2157/2022/எச்1)**

**தீர்மானம் எண்:—159**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.22**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 07.08.2022ம் தேதிய காணொளி காட்சியில் வழங்கப்பட்ட அறிவுரையின்படி இந்நகராட்சியால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சொத்துவரி பொதுச்சீராய்வு தொடர்பாக மறுவரையரை செய்யப்பட்ட வார்டுகளின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் இணையதளத்தில் (UTIS)ல் பதிவிறக்கம் செய்யப்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரைக்கான வரிவிதிப்புகளுக்குரிய விசேஷ அறிக்கை (Special Notice)யினை நகல் எடுத்து 25.08.2022க்குள் அனைத்து வரிவிதிப்புதாரர்களுக்கும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பழைய வார்டுகளின் அடிப்படையில் ஏற்கனவே 1 முதல் 33 வார்டுகளுக்குரிய சிறப்பு அறிவிப்பு கடிதம் (Special Notice) 35000 X 2=70000 நகல் எடுத்து வழங்க 14.07.2022 அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரியதில் கிளாசிக் ஆப்செட் அன் கார்ட்ஸ், மெயின் பஜார், கடையநல்லூர் அச்சகம் நகல் 1க்கு ரூ.1.30/— விலை விகிதத்தில் நகல் எடுத்து வழங்க விலைப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்டது. மேற்காணும் விலைப்புள்ளிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.121 நகல் 29.07.2022 அனுமதி பெறப்பட்டு மேற்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொளிகாட்சி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரையின்படி மேற்கண்ட பணிகளை 25.08.2022க்குள் முடிக்க வேண்டியதின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே மேற்கண்ட (Special Notice) அச்சடித்து வழங்கிய கிளாசிக் ஆப்செட் அன் கார்ட்ஸ் கடையநல்லூர் அச்சகத்திற்கு 14.07.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அதே விலைப்புள்ளிக்கு நகல் எடுத்து வழங்க இவ்வலுவலக 12.08.2022ம் தேதிய கடிதத்தின்படி சம்மதக்கடிதம் கோரப்பட்டது. மேற்கண்ட கடிதத்தினை தொடர்ந்து கிளாசிக் ஆப்செட் அன் கார்ட்ஸ் அச்சகத்தின் 12.08.2022ம் தேதிய கடிதத்தில் 14.07.2022 அன்று விலைப்புள்ளியில் தெரிவிக்கப்பட்ட நகல் 1க்கு ரூ.1.30/— விலை விகிதத்தில் நகல் எடுத்து வழங்க சம்மதம் தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்கண்ட பணியினை அவசர அவசியம் கருதி முடிக்க வேண்டியது உள்ளதால் நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அதற்குரிய உத்தேச செலவினத் தொகை ரூ.100000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 900/2022/அ1)**

**தீர்மானம் எண்:—160**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.23**

கடையநல்லூர் நகராட்சி தென்காசி மாவட்டத்தின் மிகப்பெரிய முதல் நிலை நகராட்சியாகவும், அதிக அளவு மக்கள் தொகை கொண்ட நகரப் பகுதியாகவும் அமைந்துள்ளது. கடையநல்லூர் நகராட்சியின் மொத்த பரப்பளவு 52.25.ச.கி.மீ ஆகும். இந்நகராட்சியின் 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 90,364 ஆகும். தற்போதைய மதிப்பீட்டு மக்கள் தொகை 1,03,078 ஆகும். மேற்கண்டவாறு வளர்ந்து வரும் இந்நகராட்சிப் பகுதியில் வாழும் பொதுமக்களுக்கு குறிப்பாக இளைஞர்களின் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையிலும், மற்றும் இந்நகர் பகுதிமக்களுக்கும் மற்றும் இந்நகரை சுற்றி அமைந்துள்ள பகுதிகளிலிருக்கும் பொதுமக்களுக்கு பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த உள்கட்டமைப்பு திட்டங்கள் செயல்படுத்தி வடிவம் கொடுக்கப்படும் நிகழ்வில், இந்நகர்ப்பகுதி பெரிதும் வளர்ச்சி அடைவதற்கு சாத்தியக்கூறுகள் ஏற்படும்.

மேலும் இந்நகர்ப் பகுதியில் மேற்கண்டவாறு எவ்விதமான பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த விளையாட்டு அரங்கம் திட்டங்கள் ஏதும் செயல்பாட்டில் இல்லை. மேலும், தென்காசி மாவட்டதிற்கென தனியாக ''மாவட்ட விளையாட்டு அரங்கம்'' ஏதும் அமையப்பெறவில்லை. அதனடிப்படையில் நகர்மன்ற தலைவர் திரு.எம்.ஏ.ஹபீபுர் ரஹ்மான் அவர்களின் வேண்டுகோளின்படி தென்காசி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 13.08.2022 அன்று இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ''கடையநல்லூர்–அச்சன்புதூர்'' நெடுஞ்சாலையினை (MAJOR DISTRICT ROAD) ஒட்டி அமைந்துள்ள சர்வே வார்டு: J, பிளாக்:42, நகரளவை எண்:4, சர்க்கார் புறம்போக்கு – பரம்பு என நிலவகைப்பாடு செய்யப்பட்டுள்ள பகுதி ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட பகுதியில் தேவைப்படும் 10.00 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நிதி உதவியுடன் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு வட்டாட்சியர் நில அளவையர் மற்றும் நகராட்சி பொறியாளர் இணைந்து அளவீடு செய்து உரிய நில உரிமை மாற்றம் முன்மொழிவு சமர்ப்பிக்குமாறு தென்காசி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக் குறிப்பு கடிதம் ந.க.எண். COLR/1110/2022/A6, நாள்.18.08.2022ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு கடையநல்லூர் நகரம் சர்வே வார்டு J, பிளாக் 42 நகரளவை எண்.4ல் உள்ள 10 ஏக்கர் சர்க்கார் புறம்போக்கு – பரம்பு என நில வகைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்குரிய நிலஉரிமை மாற்றம் முன்மொழிவினை மாவட்ட ஆட்சித்தலைவர், தென்காசி அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2263 /2022/எப்1)**

**தீர்மானம் எண்:–161**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.24**

கடையநல்லூர் நகராட்சி தென்காசி மாவட்டத்தின் மிகப்பெரிய முதல் நிலை நகராட்சியாகவும், அதிக அளவு மக்கள் தொகை கொண்ட நகரப் பகுதியாகவும் அமைந்துள்ளது. கடையநல்லூர் நகராட்சியின் மொத்த பரப்பளவு 52.25.ச.கி.மீ ஆகும். இந்நகராட்சியின் 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 90,364 ஆகும். தற்போதைய மதிப்பீட்டு மக்கள் தொகை 1,03,078 ஆகும். மேற்கண்டவாறு இந்நகரில் அதிகரித்து வரும் மக்கள் தொகையினை கருத்தில் கொண்டும் மற்றும் எதிர்வரும் காலங்களில் இந்நகரில் ஏற்படும் வளர்ச்சியினை கருத்தில் கொள்ளும் நிகழ்வில், தற்போது இந்நகரில் இயங்கிவரும் அரசு மருத்துவமனையின் மூலம் வழங்கப்பட்டுவரும் மருத்துவ சேவை போதுமானதாக இல்லை. மேலும் இந்நகரில் எந்நேரத்திலும் செயல்படும் அனைத்து தீவிர மருத்துவ சிகிச்சை வசதிகளுடன் கூடிய தனியார் மருத்துவமனைகளும் இல்லை. மேலும் மேற்கண்ட மருத்துவ சேவை பெறுவதற்கு இந்நகரிலிருந்து மக்கள் திருநெல்வேலி மற்றும் மதுரையில் அமைந்துள்ள மருத்துவமனைகளுக்கு செல்லும் நிலை இருந்து வருகிறது. இந்நகரில் இயங்கிவரும் அரசு மருத்துவமனை போதிய இடவசதியின்றி இருப்பதினால், கூடுதல் கட்டமைப்புகள் அமைப்பதற்கும் இயலவில்லை. தற்போது இந்நகரில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை 1.16 ஏக்கர் பரப்பளவில், பாப்பன்கால்வாய் ஒட்டி அமைந்துள்ளதால், இடவிரிவாக்கம் செய்து போதுமான கூடுதல் கட்டமைப்புகள் ஏற்படுத்துவதற்கு வழிவகை இல்லை. மேலும் இந்நகரில் இயங்கிவரும் அரசு சித்தா மருத்துவமனை மேலக்கடையநல்லூர் ரோடு எண் 11–ஐ ஒட்டி (சர்வே வார்டு:H, பிளாக்:30, நகரளவை எண்:3–2)–ல் 2.54 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. மேற்கண்ட சித்தா மருத்துவமனை அமைந்துள்ள பகுதியின் பெரும்பகுதி காலி இடமாகவே உள்ளது. எனவே இந்நகரில் வாழும் மக்கள் மற்றும் இந்நகரினை சுற்றி அமைந்துள்ள கிராமங்களில் வாழும் மக்கள் மொத்தம் சுமார் 2,05,000 பேர் அனைத்து தீவிர மருத்துவ சிகிச்சை வசதிகள் கிடைக்கும் வகையில், மேற்கண்ட சித்தா மருத்துவமனை அமைந்துள்ள பகுதியில்

புதியதாக அரசு மருத்துவமனை அமைப்பதற்கும் மற்றும் தற்போது இயங்கிவரும் அரசு சித்தா மருத்துவமனையை இடம்மாற்றம் செய்து கடையநல்லூர் அரசு மருத்துவமனை வளாகப்பகுதிக்குள் இயங்க செய்வதற்கும் நகர்மன்ற தலைவர் திரு.எம்.ஏ.ஹபீபுர் ரஹ்மான் அவர்களின் வேண்டுகோளின்படி தென்காசி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 13.08.2022 அன்று இடம் நேராய்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்கண்ட உரிய முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு தென்காசி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக் குறிப்பு கடிதம் ந.க.எண். COLR/1110/2022/A6, நாள்.18.08.2022ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு தற்போதுள்ள அரசு சித்தா மருத்துவமனை வளாகப்பகுதிக்குள் புதியதாக அரசு மருத்தவமனை அமைத்து தரம் உயர்த்தவும் மற்றும் தற்போதுள்ள கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் சித்தா மருத்துவமனை இயங்க செய்வதற்கும் உரிய முன்மொழிவுகள் துணை இயக்குநர்(சுகாதாரப் பணிகள்) தென்காசி, அவர்கள் மூலம் அரசுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2263 /2022/எப்1)**

**தீர்மானம் எண்:–162**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.25**

இந்நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு மான்யத்தில் Un Tied Grant 2021-2022-ம் ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ரூ.116/–இலட்சத்தில், தற்போது ஏழு எண்ணம் பணிகளை மட்டும் ரூ.76.00/–இலட்சத்தில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31116/2021/அம்ருட்–2, நாள்.05.01.2022–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.40.00/–இலட்சத்தில் இந்நகராட்சிப் பகுதியில் தெருவிளக்குகள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நகராட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட ஏழு எண்ணம் பணிகளுக்கு மதிப்பீட்டு தொகை ரூ.66.50/–இலட்சத்திற்கு பதிலாக ரூ.76.00/–இலட்சம் என கூடுதலாக ரூ.9.50/–இலட்சம் கணக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள கூடுதல் தொகை ரூ.9.50/–இலட்சத்தில் இந்நகராட்சிப் பகுதியில் உள்ள பஜார் ரோடு, மசூது தைக்கா மேல்நிலைப்பள்ளி அருகே உள்ள பாலம் மற்றும் கழிவுநீர் ஓடையினை சரி செய்யும் பணியினை மேற்கொள்ளவும், மேற்படி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5427/2021/இ1)**

**தீர்மானம் எண்:–163**

அனுமதிக்கப்பட்டது.

**நகர் மன்றத் தலைவர் திரு.எம்.ஏ.ஹபீபுர் ரஹ்மான் அவர்களால் கொண்டுவரும் தீர்மானம்**

கடையநல்லூர் நகராட்சி தென்காசி மாவட்டத்தின் மிகப்பெரிய முதல் நிலை நகராட்சியாகவும், அதிக அளவு மக்கள் தொகை கொண்ட நகரப் பகுதியாகவும் அமைந்துள்ளது. கடையநல்லூர் நகராட்சியின் மொத்த பரப்பளவு 52.25.ச.கி.மீ ஆகும். இந்நகராட்சிக்கு சொந்தமான பேரறிஞர் அண்ணா நகராட்சி தினசரி சந்தை, வார்டு எண்:17,முப்புடாதி அம்மன் கோவில் தென்வடல் தெரு, முப்புடாதி அம்மன் கோவில் தெரு, Dr.அம்பேத்கர் தெரு, பெண்கள் பள்ளிக்கூடம் தெற்கு தெரு மற்றும் பெண்கள் பள்ளிக்கூடம் வடக்கு தெரு ஆகிய தெருக்கள் இணையும் பகுதியில் சர்வே வார்டு:E, பிளாக்:1, நகரளவை எண்:93 விஸ்தீரணம் 555.00.ச.மீ (13.75 செண்டு)–ல் இந்நகராட்சி பஞ்சாயத்து போர்டாக செயல்பட்ட காலத்திலிருந்து சுமார் 60 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருகிறது. இந்நகராட்சியின் 2011–ம் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 90,364 ஆகும். தற்போதைய மதிப்பீட்டு மக்கள் தொகை சுமார் 1,03,078 ஆகும். மேற்கண்டவாறு அதிகரித்து வரும் மக்கள் தொகையினை கருத்தில் கொண்டும், எதிர் வரும் காலங்களில் இந்நகரில் ஏற்படும் வளர்ச்சியின் அடிப்படையிலும் தற்போதைய இடத்தில் 32 நிரந்தர கடைகளுடன் இயங்கிவரும் பேரறிஞர் அண்ணா நகராட்சி தினசரி சந்தை காய்கனிகள் மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை வியாபாரம் செய்வதற்கு போதுமான இடவசதியின்றி அமைந்துள்ளது. இந்நிலையில் திரு.S.சித்தார்த்தன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளை W.P.(MD)No.1981 of 2017ன் மீதான

தீர்ப்பாணை நாள்.06.02.2017—ன்படி கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.17&18ல் முப்புடாதி அம்மன் கோவில் தெரு, பெண்கள் பள்ளிக்கூடம் தெற்கு தெரு மற்றும் பெண்கள் பள்ளிக்கூடம் வடக்கு தெரு ஆகிய பகுதிகளில் கடையநல்லூர் நகராட்சி தினசரி சந்தையின் ஒரு அங்கமாக செயல்பட்டுவரும் தற்காலிக கடை ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் திரு.S.சித்தார்த்தன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட W.P.(MD)No.10063 of 2019ன் மீதான வழிகாட்டுதல் உத்தரவு நாள்.17.06.2019—ன்படி மேற்கண்ட பகுதிகளில் அகற்றப்பட்ட ஆக்கிரமிப்புகளை தொடர்ந்து, அப்பகுதிகளில் மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாத வகையில் கண்காணித்து Status Report தாக்கல் செய்யுமாறு காவல் ஆய்வாளர், கடையநல்லூர் மற்றும் கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு உத்திரவிடப்பட்டது.

அதனை தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை Cont.Pet.(MD)No.1851 of 2019 in W.P.(MD)No.10063 of 2019—ன்படி மேற்கண்ட வழக்கின் மீது பிறப்பிக்கப்பட்ட உத்திரவினை முழுமையாக செயல்படுத்தவில்லை எனக்கூறி நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை W.P(MD)No.10651, 3699 of 2017 & 3294, 4851, 4852, 10761of 2015ன் மீது வழங்கப்பட்ட தீர்ப்பாணை நாள்.21.08.2019 மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை W.P(MD)No.16320 of 2019 ன் மீது வழங்கப்பட்ட இடைக்கால நீதிமன்ற உத்திரவு நாள்.12.09.2019, 23.09.2019 & 27.11.2019—களின்படி 29 தினசரி சந்தை தெருவோர வியாபாரிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பல்வேறு வழக்குகளில் தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் தெருவோர வியாபாரத்தினை முறைப்படுத்துதல்) சட்டம் 2014 (Central Act 7 of 2014)—ல் வகுத்துரைக்கப்பட்டுள்ள திட்ட விதிமுறைகளின்படி உரிமம் வழங்குதல் / மேற்படி சட்ட உட்கூறுகளின்படி மாற்று இடத்தில் விற்பனை மண்டலம் அமைத்து ஒதுக்கீடு செய்யும் வரையிலும் மேற்கண்ட வகையிலான தெருவோர ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு இடைக்கால தடை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை W.P(MD)No.3294Ï 10761 of 2015 & 10651, 3699 of 2017—களின்படி மேற்படி வழக்குகளின் மீது வழங்கப்பட்ட 6 மாத கால அளவினை மேலும் காலநீட்டிப்பு வழங்குவதற்கு உரிய உத்திரவு பிறப்பிக்குமாறு கேட்டு கடையநல்லூர் நகராட்சி ஆணையாளரால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

எனவே, மேற்கண்ட நீதிமன்ற உத்திரவுகளை விரைந்து செயல்படுத்தும் வகையிலும் மற்றும் தற்போது இயங்கி வரும் நகராட்சி தினசரி சந்தை, இந்நகரின் மையப்பகுதியில் ஏழு தெருக்கள் சந்திக்கும் பகுதியில் அமைந்திருப்பதினால் அத்தெருக்களில் வாழும் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பெரும் இடையூறாக இருப்பதாக கூறி, மேற்கண்ட பேறறிஞர் அண்ணா நகராட்சி தினசரி சந்தையினை நிரந்தரமாக இடமாற்றம் செய்து, புறநகர்ப்பகுதியில் அமைத்திடுமாறு கேட்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மனுக்கள் குழுவிடம் குறிச்சி S.சுலைமான், கடையநல்லூர் அவர்களால் மனு கொடுக்கப்பட்ட நிலையில், 08.03.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மனுக்கள் குழு 2021—2022—ன் மூலம் நேரடியாக மேற்படி தினசரி சந்தை ஆய்வு செய்யப்பட்டு, மேற்கண்ட நகராட்சி தினசரி சந்தை இடமாற்றம் தொடர்பாக தகுந்த இடத்தினை தேர்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 08.03.2022 அன்று தென்காசி மாவட்ட ஆட்சியரகத்தில் வைத்து நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மனுக்கள் குழு ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

எனவே மேற்கண்ட காரணிகளை கருத்தில் கொண்டு, கடையநல்லூர் நகராட்சி பேருந்து நிலையத்தின் அருகாமையில் தேசிய நெடுஞ்சாலை ஒட்டி பொதுமக்கள் எளிதாக வந்து செல்லும் வகையில் அமைந்துள்ள கடையநல்லூர் நகரம் சர்வே வார்டு:H, பிளாக்:4, நகரளவை எண்:155 "சர்க்கார் புறம்போக்கு மந்தை" என நில வகைப்பாடு செய்யப்பட்டு, இந்நகராட்சியின் கட்டுப்பாட்டிலும், பராமரிப்பிலும் காலி நிலமாக அமைந்துள்ள பகுதியினை மொத்த வியாபாரம் செய்யும் வகையில் தினசரி சந்தை அமைப்பதற்கு நில உரிமை மாற்றம் செய்து உரிய ஆணை வழங்க தமிழக அரசினை கேட்டுக்கொள்ளுதல்.

**தீர்மானம் எண்:—164**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**நகர் மன்றத் தலைவர் திரு.எம்.ஏ.ஹபீபுர் ரஹ்மான் அவர்களால் கொண்டுவரும் தீர்மானம்**

கடையநல்லூர் நகராட்சி தென்காசி மாவட்டத்தின் மிகப்பெரிய முதல் நிலை நகராட்சியாகவும், அதிக அளவு மக்கள் தொகை கொண்ட நகரப் பகுதியாகவும் அமைந்துள்ளது. கடையநல்லூர் நகராட்சியின் மொத்த பரப்பளவு 52.25.ச.கி.மீ ஆகும். இந்நகராட்சியின் 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 90,364 ஆகும். தற்போதைய மதிப்பீட்டு மக்கள் தொகை 1,03,078 ஆகும். மேற்கண்டவாறு வளர்ந்து வரும் இந்நகராட்சிப் பகுதியில் வாழும் பொதுமக்களுக்கு குறிப்பாக இளைஞர்களின் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையிலும், மற்றும் இந்நகர் பகுதிமக்களுக்கும் மற்றும் இந்நகரை சுற்றி அமைந்துள்ள பகுதிகளிலிருக்கும் பொதுமக்களுக்கு பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த உள்கட்டமைப்பு திட்டங்கள் செயல்படுத்தி வடிவம் கொடுக்கப்படும் நிகழ்வில், இந்நகர்ப்பகுதி பெரிதும் வளர்ச்சி அடைவதற்கு சாத்தியக்கூறுகள் ஏற்படும்.

எனவே இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட "கடையநல்லூர்–அச்சன்புதூர்" நெடுஞ்சாலையினை (MAJOR DISTRICT ROAD) ஒட்டி அமைந்துள்ள சர்வே வார்டு: J, பிளாக்:42, நகரளவை எண்:4, சர்க்கார் புறம்போக்கு – பரம்பு என நிலவகைப்பாடு செய்யப்பட்டுள்ள பகுதியில் தேவைப்படும் 3.00 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் இந்நகராட்சியின் மூலம் பொழுதுபோக்கு அம்சங்களுடன் சிறுவர் அறிவியல் பூங்கா அமைப்பதற்கு ஏதுவாக இந்நகராட்சிக்கு நிலஉரிமை மாற்றம் செய்து வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் தமிழக அரசினை கேட்டுக்கொள்ளுதல்.

**தீர்மானம் எண்:–165**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

**நகர் மன்றத் தலைவர் திரு.எம்.ஏ.ஹபீபுர் ரஹ்மான் அவர்களால் கொண்டுவரும் தீர்மானம்**

கடையநல்லூர் நகராட்சி தென்காசி மாவட்டத்தின் மிகப்பெரிய முதல் நிலை நகராட்சியாகவும், அதிக அளவு மக்கள் தொகை கொண்ட நகரப் பகுதியாகவும் அமைந்துள்ளது. கடையநல்லூர் நகராட்சியின் மொத்த பரப்பளவு 52.25.ச.கி.மீ ஆகும். இந்நகராட்சியின் 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 90,364 ஆகும். தற்போதைய மதிப்பீட்டு மக்கள் தொகை 1,03,078 ஆகும். இந்நகராட்சியின் தற்போதைய கடையநல்லூர் நகராட்சி பெருந்தலைவர் காமராஜர் நினைவு பேருந்து நிலையமானது 'C'தரத்தில் தேசிய நெடுஞ்சாலை 744–ஐ ஒட்டி அமைந்துள்ள கடையநல்லூர் கிராமம், புல எண்:264/9, 1–2A (கடையநல்லூர் நகரம், சர்வே வார்டு:G பிளாக்:1 நகரளவை எண்:8) – 0.33.50 ஹெக்டேர் – (83 செண்டு) பரப்பளவில் இயங்கி வருகிறது. மேற்கண்ட பேருந்து நிலையத்தினைசுற்றி நீர் நிலை பகுதிகளும், தனியாருக்கு சொந்தமான இடங்களும் அமைந்துள்ளதால் விரிவாக்கம் செய்வதற்கு வழிவகை இல்லை. மேலும் இந்நகரில் அதிகரித்து வரும் மக்கள் தொகை மற்றும் போக்குவரத்து நெரிசல் கருத்தில் கொள்ளும் நிகழ்வில், தற்போதைய பேருந்து நிலையம் போதிய இடவசதி இன்றி, அரசு பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் கடையநல்லூர் அரசு மருத்துவமனை பேருந்து நிறுத்தப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டு வருகிறது. இதனால் அப்பகுதியில் எப்பொழுதும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் தற்போது இயங்கி வரும் பேருந்து நிலையம் போதிய இடவசதி இன்றி இருப்பதால், பேருந்து நிறுத்த கட்டமைப்புகள் (Bus bays) மற்றும் கூடுதல் அடிப்படை வசதி கட்டமைப்புகள் ஏற்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்கண்ட பேருந்து நிலையத்திற்குள் தினந்தோறும் 190 பேருந்துகள் வந்து செல்கின்றன. மேற்கண்ட பேருந்து நிலையம் தென்காசி மாவட்டத்தின் மிக முக்கியமான சாலையாகிய செங்கோட்டை – மதுரை மார்க்கத்தில் அமைந்துள்ள பேருந்து நிலையமாக இயங்கி வருகிறது. மேற்கண்ட பேருந்து நிலையத்திலிருந்து செங்கோட்டை, சுரண்டை, வீ.கே.புதூர், கரடிகுளம் பாம்புகோவில்சந்தை மற்றும் கம்பனேரி போன்ற இடங்களுக்கு அரசு நகரப் பேருந்துகள், தனியார் பேருந்துகள் மற்றும் சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

எனவே, எதிர்வரும் காலங்களில், ஏற்படும் வளர்ச்சியின் அடிப்படையில், இந்நகர் பொதுமக்கள் மற்றும் இந்நகருக்கு தினந்தோறும் வந்து செல்லும் வெளியூர் மக்கள் ஆகியோர்களின் நலன் கருதி பேருந்து நிலையத்திற்குள் பேருந்துகள் நிறுத்தி வைக்கும் நிலையில் போதிய இடவசதிகளுடன் கூடிய அனைத்து அடிப்படை வசதிகளுடன் நவீன பேருந்து நிலையம் அமைப்பதற்கு, தற்போது இயங்கி வரும் நகராட்சி பேருந்து நிலையத்தின் எதிர்புறம் தேசிய நெடுஞ்சாலை மற்றும் பண்பொழி ரோட்டினை ஒட்டி அமைந்துள்ள அறநிறுவனங்களுக்கு சொந்தமான கடையநல்லூர் நகரம், சர்வே வார்டு:H, பிளாக்:3, நகரளவை எண்:13pt & 14 (கடையநல்லூர் கிராமம், புல எண்:629 & 2050/1) கடையநல்லூர் சத்திரம் என பதிவு செய்யப்பட்டுள்ள 8.84 ஏக்கர் பரப்பளவில் 4.00 ஏக்கர் பரப்பளவு கொண்ட விவசாய பயன்பட்டிலுள்ள நிலத்தினை பொது நோக்கத்திற்காக இந்நகராட்சிக்கு நீண்ட கால குத்தகை

அடிப்படையில் வழங்குவதற்கு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மற்றும் தமிழக அரசினை கேட்டுக்கொள்ளுதல்.

**தீர்மானம் எண்:– 166**

தீர்மானம் கைவிடப்பட்டது.

**நகர் மன்றத் தலைவர் திரு.எம்.ஏ.ஹபீபுர் ரஹ்மான் அவர்களால் கொண்டுவரும் தீர்மானம்**

கடையநல்லூர் நகராட்சி தென்காசி மாவட்டத்தில் மிகப்பெரிய முதல்நிலை நகராட்சியாகவும், அதிக அளவு மக்கள் தொகை கொண்ட நகரப்பகுதியாகவும் அமைந்துள்ளது. கடையநல்லூர் நகராட்சியின் மொத்த பரப்பளவு 52.25 ச.கி.மீ ஆகும். இந்நகராட்சியின் 2011–ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 90,364 ஆகும். தற்போதைய மதிப்பீட்டு மக்கள் தொகை 1,03,078 ஆகும். இந்நகராட்சி அரசு ஆணை (நிலை எண்) 156 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நாள்.06.04.2015ன் படி புதியதாக தோற்றுவிக்கப்பட்ட கடையநல்லூர் வட்டத்தில் அமைந்துள்ளது. மேற்கண்ட கடையநல்லூர் வட்டம் மக்கள் தொகை பெருக்கம் மற்றும் வளர்ச்சி பிரச்சினைகளின் அடிப்படையில் கடையநல்லூர் நகரப்பகுதியினை தலைமையிடமாக கொண்டு அமைக்கப்பட்டது.

இக்கடையநல்லூர் வட்டத்தில் 31 வருவாய் கிராமங்கள் அமைந்துள்ளது. மேற்கண்ட வருவாய் கிராமங்களில் 7 வருவாய் கிராமங்கள் நகரப்பகுதிகளுக்குள்ளும் மற்றும் 24 வருவாய் கிராமங்கள் ஊரகப்பகுதிகளுக்குள்ளும் அமைந்துள்ளது. மேற்கண்ட வருவாய் கிராமங்களிலிருந்து தற்போது சிவகிரி மற்றும் தென்காசியில் அமைந்துள்ள கீழமை நீதிமன்றங்களுக்கு வழக்குகள் தொடர்பாக பொதுமக்கள் சென்று வருகிறார்கள். இக்கடையநல்லூர் வட்டப்பகுதிகளுக்குள் அதிக வழக்குகள் இருந்து வருகிறது. எனவே, தமிழக அரசு உத்திரவுப்படி, ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்பதின் அடிப்படையில், கடையநல்லூர் வட்டத்திற்கு குற்றவியல் நடுவம் நீதிமன்றம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைத்து தருவதற்கு தமிழக அரசினை கேட்டுக்கொள்ளுதல்.

**தீர்மானம் எண்:–167**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

**நகர்மன்ற தலைவர் திரு.எம்.ஏ,ஹபீபுர் ரஹ்மான் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அரசு மருத்துவமனை பேருந்து நிறுத்தம் அருகே இயங்கி வரும் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் மொத்தம் 2195 மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மேற்படி பள்ளிக்கூடம் தேசிய நெடுஞ்சாலையின் அருகாமையில் அமைந்துள்ளதாலும், இப்பள்ளியினை சுற்றி பேருந்து நிறுத்தம், அரசு மருத்துவமனை, சார்பதிவாளர் அலுவலகம், தினசரி மார்க்கெட் மற்றும் அதிகமான வணிக நிறுவனங்கள் அமைந்துள்ள காரணத்தினாலும், போக்குவரத்து நெரிசல் மற்றும் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்து வருகிறது. இதனால் மாணவியர்கள் சாலையை கடந்து செல்ல மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். மேலும், மேற்படி பள்ளிக்கூடத்தில் மாணவியர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் மாணவியர் சேர்க்கையில் பெரும் சிரமம் ஏற்படுவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வருவதால் பொதுமக்கள் மற்றும் மாணவியர்கள் நலன் கருதி நகராட்சி பகுதியில் மலம்பாட்டை சாலையில் இயங்கி வரும் பேட்டை நகராட்சி நடுநிலைப்பள்ளியினை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்திட தமிழ்நாடு அரசுக்கு பரிந்துரை செய்திட தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கேட்டுக் கொள்ளுதல்.

**தீர்மானம் எண்:–168**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

**10 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திரு. ரா.முருகன் வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.**

நம் தாய் திருநாட்டின் 75வது சுதந்திர தின கொண்டாட்டத்தை முன்னிட்டு சுதந்திரப் போராட்ட வீரரின் தியாகத்தைப் போற்றும் வண்ணம் ஏற்கனவே நகர்மன்றக் கூட்ட அரங்கில் பழுதடைந்து உள்ள இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்ட மாவீரர் அழகு முத்துக் கோன் அவர்களின் பழைய நிழற்படத்தினை எடுத்துவிட்டு புதிய படம் அமைக்க கொண்டு வருதல்.

**தீர்மானம் வழிமொழிபவர்:**

| | | |
|---|---|---|
| திருமதி.K. பூங்கோதை | – | 2 வது வார்டு MC |
| திருமதி.ரா.சுபா | – | 3 வது வார்டு MC<br>(நகராட்சி திட்டக்குழு உறுப்பினர்) |
| திருமதி.M.மகேஸ்வரி | – | 22 வது வார்டு MC |
| திருமதி.S.துர்க்கா தேவி | – | 23 வது வார்டு MC |
| திரு.S.சுந்தர மகாலிங்கம் | – | 30 வது வார்டு MC |

**தீர்மானம் எண்:–169**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**(ஒம்) M.A.ஹபீபுர் ரஹ்மான்,**
**நகர் மன்ற தலைவர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**